**Tamilnad Mercantile Bank Ltd**
Be a step ahead in life

தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட்,
பதிவு அலுவலகம்: 57, V.E. ரோடு, தூத்துக்குடி
விருதுநகர் கிளை
280, மதுரை ரோடு, விருதுநகர் -626001
**CIN No: L65110TN1921PLC001908**

பதிவுத் தபால் ஒப்புகையுடன்

**08.09.2026**

1. M/s. Anu Spices Corporation — கடன்தாரர்
D.No.50/1, கட்டபொம்மன் தெரு,விருதுநகர் 626001.

2. திரு. நாகமணி S, த /பெ: திரு. சக்திவேல் — உரிமையாளர் / அடமானதாரர்
D.No.50/1, கட்டபொம்மன் தெரு,விருதுநகர் 626001.

3. திருமதி. பேபி அனுராதா S, க/ பெ: திரு. S. நாகமணி ஜாமீன்தாரர்
D.No.50/1, கட்டபொம்மன் தெரு,விருதுநகர் 626001.

ஏல விற்பனை அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிசொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 8(6) & 9(1)-ன் கீழ் வங்கியிடம் அடமானத்தில் உள்ள அசையா சொத்தின் விற்பனை:

இதனால் பொதுமக்கள் மற்றும் **கடன்தாரர்** M/s. Anu Spices Corporation,50/1, கட்டபொம்மன் தெரு, விருதுநகர் 626001 **உரிமையாளர்** திரு. S. நாகமணி, த/பெ: சக்திவேல், 50/1, கட்டபொம்மன் தெரு, விருதுநகர் 626001. **ஜாமீன்தாரர்:** திருமதி. N. பேபி அனுராதா, க/பெ திரு. S. நாகமணி, 50/1, கட்டபொம்மன் தெரு, விருதுநகர் 626001 அவர்களுக்கு அறிவிப்பது என்னவென்றால் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் **விருதுநகர்** கிளையில் அடமானமாக வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்து மேற்படி வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாள சுவாதீனம் செய்யப்பட்டு "உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ள நிலையில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் எங்களது தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, **விருதுநகர்** கிளைக்கு வரவேண்டிய பாக்கித்தொகை **31.08.2026** தேதிப்படி ரூ.1,60,19,850.94 (ரூபாய் ஒரு கோடியே அறுபது இலட்சத்து பத்தொன்பதாயிரத்து எட்டுநூற்று ஐம்பது மற்றும் தொண்ணூற்று நான்கு பைசா மட்டும்) இதில் (Cash Credit- ரூ.1,44,59,798.77,Term Loan-GECL-I ரூ.12,715.73, Term Loan- GECL-II ரூ.15,47,336.44) மற்றும் பின்வரும் வட்டி மற்றும் செலவு தொகையை சேர்த்து வசூல் செய்வதற்காக **28.09.2026** அன்று பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது. **ஏல நிர்ணயத்தொகை ரூ.63,00,000/- (ரூபாய் அறுபத்து மூன்று இலட்சம் மட்டும்) மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.6,30,000/-**.(ஆறு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்)

ஏலவிபரம்

| | |
|---|---|
| ஏலம் நடைபெறும் இடம்: | தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட், விருதுநகர் கிளை, 280, மதுரை ரோடு, விருதுநகர் -626001. PH- 04562-245341 Mobile Number : 98421 45341 & 89250 33889 |
| ஏலம் நடைபெறும் தேதியும், நேரமும்: | 28.09.2026 @ 04.00 P.M. (திங்கட்கிழமை) |
| ஏல நிர்ணயத்தொகை | ரூ.63,00,000/- (ரூபாய் அறுபத்து மூன்று இலட்சம் மட்டும்) |

அசையா சொத்தின் விபரம்

பகுதி A (ஆவண எண்: 1658/2012)
பட்டா எண் 1527-ன் படி, சர்வே எண் 43/6A-ல் அமைந்துள்ள, 3277.81 சதுர அடி அல்லது 7.52 சென்ட் பரப்பளவு கொண்ட நிலமும், அதில் 2756.25 சதுர அடி G.I. Sheet கூரை கொண்ட கட்டிடமும் அடங்கிய சொத்து. இச்சொத்து மல்லாங்கிணறு ரோடு, ரோசல்பட்டி கிராமம் மற்றும் ஊராட்சி, விருதுநகர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் அமைந்துள்ளது. சொத்து S. நாகமணி பெயரில் உள்ளது.

**நான்கு எல்லைகள்**
வடக்கு: சீனிவாசகன் வகையறா நிலம்
கிழக்கு: S. வேல்மணி நிலம் (பகுதி-B)
மேற்கு: 15 அடி அகலமுள்ள பொதுப் பாதை
தெற்கு: 15 அடி அகலமுள்ள பொதுப் பாதை

**பகுதி-A அளவுகள்**
வடக்கிலிருந்து தெற்கு கிழக்குப் பகுதி: 76.75 அடி
வடக்கிலிருந்து தெற்கு மேற்குப் பகுதி: 77.5 அடி
கிழக்கிலிருந்து மேற்கு வடக்குப் பகுதி: 42.50 அடி
கிழக்கிலிருந்து மேற்கு தெற்குப் பகுதி: 42.50 அடி

**பகுதி B (ஆவண எண்: 2067/2018)**
பட்டா எண் 1527-ன் படி, சர்வே எண் 43/6A-ல் அமைந்துள்ள, 3818.75 சதுர அடி அல்லது 8.77 சென்ட் பரப்பளவு கொண்ட நிலமும், அதில் 3600 சதுர அடி G.I. Sheet கூரை கொண்ட கட்டிடமும் அடங்கிய சொத்து. இச்சொத்து மல்லாங்கிணறு ரோடு, ரோசல்பட்டி கிராமம் மற்றும் ஊராட்சி, விருதுநகர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் அமைந்துள்ளது. சொத்து S. நாகமணி பெயரில் உள்ளது.மொத்த பரப்பளவு: 7096.56 சதுர அடி

**நான்கு எல்லைகள்**
வடக்கு: சீனிவாசகன் வகையறா நிலம்
கிழக்கு: பெரிய சக்கணன் நிலம்
மேற்கு: நாகமணி நிலம் (பகுதி-A)
தெற்கு: 15 அடி அகலமுள்ள பொதுப் பாதை

**பகுதி-B அளவுகள்**
வடக்கிலிருந்து தெற்கு கிழக்குப் பகுதி: 76.00 அடி
வடக்கிலிருந்து தெற்கு மேற்குப் பகுதி: 76.75 அடி
கிழக்கிலிருந்து மேற்கு வடக்குப் பகுதி: 50.00 அடி
கிழக்கிலிருந்து மேற்கு தெற்குப் பகுதி: 50.00 அடி

**நிபந்தனைகள்:**

1. ஏலத்தில் பங்கேற்க விரும்பும் ஏலதாரர்கள், சொத்தின் காப்பு விலையில் 10% தொகையை Earnest Money Deposit (EMD) ஆக செலுத்த வேண்டும். இதற்காக "Tamilnad Mercantile Bank Ltd" என்ற பெயரில், விருதுநகர் கிளையில் செலுத்தத்தக்க Demand Draft எடுத்து, 28.09.2026 அன்று பிற்பகல் 03.30 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
2. ஏலத்தில் பங்கேற்க விரும்புவோர், ஏலத்திற்கு முன்பாக சொத்தை நேரில் பார்வையிட்டு அதன் நிலை மற்றும் ஆவணங்களைப் பற்றி தங்களைத் தாங்களே திருப்திப்படுத்திக் கொள்ளலாம். இதற்காக விருதுநகர் கிளை மேலாளரை அணுகி, ஏலத்திற்கு முன் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை சொத்து / அதனுடன் தொடர்புடைய ஆவணங்களைப் பார்வையிடலாம். தொலைபேசி: 04562-245341 மொபைல்: 98421 45341 / 89250 33889
3. வெற்றிகரமான ஏலதாரர், ஏலத் தொகையில் 25% தொகையை (EMD உட்பட) அதே நாளிலோ அல்லது அடுத்த வேலை நாளிலோ தவறாமல் செலுத்த வேண்டும். ஏலம் அவருக்கு சாதகமாக முடிவு செய்யப்பட்டவுடன், செலுத்தப்பட்ட EMD தொகை உடனடியாக ஏலத் தொகையின் 25%-ல் சரிசெய்யப்படும். மேற்கண்டவாறு 25% தொகையை செலுத்தத் தவறினால், EMD பறிமுதல் செய்யப்படும் மற்றும் அந்த சொத்து உடனடியாக மீண்டும் பொதுஏலத்தில் விற்பனை செய்யப்படும்.
4. வெற்றிகரமான ஏலதாரர், ஏல விற்பனை உறுதி செய்யப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள், மீதமுள்ள 75% ஏலத் தொகையை செலுத்த வேண்டும். அல்லது, அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் / பாதுகாக்கப்பட்ட கடனளிப்பாளர் எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொள்ளும் நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் தொகையை செலுத்தத் தவறினால், Security Interest (Enforcement) Rules, 2002-ன் Rule 9, Sub-Rule (5)-ன் படி செலுத்தப்பட்ட தொகை பறிமுதல் செய்யப்படும். மேலும், சொத்து மறுவிற்பனை செய்யப்படும். தவறிய ஏலதாரர் / வாங்குபவர், அந்த சொத்து அல்லது பின்னர் விற்பனை செய்யப்படும் தொகையில் தனக்குள்ள அனைத்து உரிமைக் கோரிக்கைகளையும் இழப்பார்.

5. SARFAESI சட்டத்தின் கீழ் ஏலத்தில் பங்கேற்பதற்காக செலுத்தப்படும் எந்தத் தொகைக்கும் வட்டி வழங்கப்படாது.
6. அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின் அறிவு மற்றும் தகவலின் அடிப்படையில், மேற்கண்ட சொத்துக்கள் எந்தவிதமான வில்லங்கத்திற்கும் உட்பட்டதாக இல்லை. ஆனால், விற்பனை செய்யப்படும் சொத்து தொடர்பாக அரசாங்கத்திற்கோ அல்லது வேறு எந்த நபருக்கோ செலுத்த வேண்டிய வரி, கட்டணம், உரிமை, அடமானப் பற்று, வில்லங்கம் அல்லது வேறு ஏதேனும் நிலுவைத் தொகைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் பொறுப்பேற்க மாட்டார்.
7. சொத்து மாற்றம் / உரிமை மாற்றத்திற்குத் தேவையான பதிவு கட்டணம், முத்திரைத் தீர்வை மற்றும் சட்டப்படி பொருந்தக்கூடிய பிற கட்டணங்கள் அனைத்தையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.
8. எந்த காரணத்தையும் தெரிவிக்காமல், ஏல விற்பனையை ஏற்றுக்கொள்ளவும், நிராகரிக்கவும், ஒத்திவைக்கவும் அல்லது ரத்து செய்யவும் அங்கீகரிக்கப்பட்ட அலுவலருக்கு முழுமையான அதிகாரம் உள்ளது. மேலும், ஏலதாரர் சமர்ப்பிக்கும் Bid Form முறையாக இல்லாவிட்டால், அதனை நிராகரிக்கும் உரிமையும் அங்கீகரிக்கப்பட்ட அலுவலருக்கு உள்ளது.
9. மேலே நிர்ணயிக்கப்பட்ட காப்பு விலையைவிட குறைவான விலையில் சொத்து / சொத்துக்கள் விற்பனை செய்யப்படாது.
10. ஏலத்தில் பங்கேற்கும் போது, ஏலதாரர்கள் கீழ்க்கண்ட அடையாளச் சான்றுகளில் ஏதேனும் ஒன்றை கொண்டு வர வேண்டும்: ஆதார் அட்டை,பாஸ்போர்ட்,ஓட்டுநர் உரிமம்,குடும்ப அட்டை,வாக்காளர் அடையாள அட்டை,PAN அட்டை,அல்லது பிற செல்லுபடியாகும் அடையாளச் சான்று.
11. விற்பனைச் சான்றிதழ் (Sale Certificate) வெற்றிகரமான வாங்குபவர் / ஏலதாரரின் பெயரில் மட்டுமே வழங்கப்படும். வேறு எந்த நபரின் பெயரிலும் விற்பனைச் சான்றிதழ் வழங்கப்படாது. விற்பனைச் சான்றிதழை நிறைவேற்றுவதற்கான முத்திரைத் தீர்வை, பதிவு கட்டணம் மற்றும் தொடர்புடைய அனைத்து கட்டணங்கள், வரிகள், தீர்வைகள் ஆகியவற்றையும் வாங்குபவரே ஏற்க வேண்டும்.
12. வெற்றிகரமான ஏலதாரர் / வாங்குபவர், வருமான வரிச் சட்டம், 1961, பிரிவு 194(1-A)-ன் படி விற்பனைத் தொகையில் 1% TDS பிடித்தம் செய்து, அதனை Form 26QB மூலம் செலுத்த வேண்டும். மேலும், TDS சான்றிதழின் அசல் ரசீதை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். (ரூ.50.00 இலட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள சொத்துகளுக்கு பொருந்தும்.)
13. இந்த விற்பனை அறிவிப்பு வங்கியின் இணையதளத்திலும் பதிவேற்றம் / வெளியிடப்பட்டுள்ளது: www.tmb.bank.in

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,**

**இடம் : விருதுநகர்**

**தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட் ,**

**தேதி : 08.09.2026**

**விருதுநகர் கிளை**